## ED visit to FI Saturation Camp at Villianur village, Puducherry




Shri R. Kesavan, ED addressing the participants



Re-KYC by BC using handheld device



Disbursement of claims under PMJJBY/ PMSBY to a beneficiary

| | |
|---|---|
|  |  |
| Participants of the event | Participants visiting the stalls of the banks for enrollment and re-KYC |

திகள்

புதுச்சேரி 7–8–2025 11



### வில்லியனூரில்

## பிரதமரின் மக்கள் நலத்திட்டங்கள் குறித்து சிறப்பு முகாம்

வில்லியனூர், ஆக.7- இந்திய அரசு நிதி சேவைகள் துறை சார்பில் ஊரக நிலைகளில் நிதி உள்ளடக்கத்தை வலுப்படுத்தும் நோக்கத்துடன் ஜூலை 1-ந்தேதி முதல் செப்டம்பர் 30-ந்தேதி வரை நிதி உள்ளடக்கம் முழுமை அடைவதற்கான பிரசாரம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

இதன் ஒரு பகுதியாக மாநில அளவிலான வங்கியாளர் குழுமம், வில்லியனூர் கிராம பஞ்சாயத்து (கிழக்கு) சார்பில் வில்லியனூரில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் பிரதமரின் மக்கள் நலத்திட்டங்கள் குறித்த சிறப்பு முகாம் நடைபெற்றது.

இந்திய ரிசர்வ் வங்கியின் நிர்வாக இயக்குனர் கேசவன் ராமச்சந்திரன், பொதுமேலாளர் ராஜ்குமார், இந்தியன் வங்கி நிர்வாக இயக்குனர் ஷிப் பஜ்ரங்சிங், பொது மேலாளர் சந்திரசேகரன், கள பொது மேலாளர் பத்மாவதி ஸ்ரீகாந்த், வில்லியனூர் துணை கலெக்டர் குமரன் ஆகியோர் சிறப்பு அழைப்பாளராக கலந்துகொண்டனர்.

முகாமில் பிரதமர் ஜனதன் யோஜனா, பிரதமர் ஜீவன் ஜ்யோதி பீமா யோஜனா, பிரதமர் பாதுகாப்பு பீமா யோஜனா, அட்டல் பென்ஷன் யோஜனா போன்ற நிதி சார்ந்த நலத்திட்டங்களில் பதிவு மற்றும் இதர சேவைகள் வழங்கப்பட்டன. மேலும் ரீ-கேஒய்சி, வங்கி கணக்குகளுக்கு வாரிசு நியமனம், உரிமை கோரா வைப்புத் தொகைகள், டிஜிட்டல் மோசடிகள் குறித்து விழிப்புணர்வு மற்றும் வங்கி புகார் தீர்வு முறைகள் குறித்த விளக்கப்பட்டன. இந்த முகாமில் பொதுமக்கள் பலரும் கலந்து கொண்டு பயனடைந்தனர்.